Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.288/2022, Cr.No.171/2016, Kurisilapet PS.
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4, Page.No.

| | |
|---|---|
| பெயர் | மயில்வாகனன் |
| வயது | 58 |
| தந்தை/கணவர் பெயர் | சின்னராஜ் |
| தொழில் | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | ஏலகிரி |
| மாவட்டம் | திருப்பத்தூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 19th day of November 2025

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.- (எதிரி ஆஜர்)**

நான் தற்போது ஏலகிரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இறுதியறிக்கை பதிவு செய்து தாக்கல் செய்த காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பாரதி என்பவர் பணி நிமித்தம் காரணமாக வெளியூர் சென்றிருப்பதால் அவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரீட்சையம் என்பவதால் அவருக்காகவும் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் கடந்த 02.10.2016 அன்று குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த விஸ்வநாதன் த/பெ.வடிவேல் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் அன்றைய தினமே காலை 10.00 மணியளவில் குரிசிலாப்பட்டு காவல் நிலையக் குற்ற எண்.171/2016, இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய

தினமே பகல் 12.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் ஆனந்தன் மற்றும் ரஞ்சித் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே பகல் 12.15 மணியளவில் வாதியின் வீட்டின் எதிரில் சாட்சி ஜெயந்தி என்பவர் எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்தான கருங்கல்லை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம்-91 மூலமாக கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம்-91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரை சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 03.10.2016 அன்று பகல் 12.00 மணியளவில் கூடப்பட்டு பேருந்து நிறுத்தம் அருகில் இவ்வழக்கின் எதிரியை கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்த வேண்டி எதிரியையும் வழக்கு சொத்தையும் தக்க வழிக்காவலுடன் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் காயமுற்ற விஸ்வநாதன் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திருமதி.சசிகலா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி விஸ்வநாதனுக்கு ஏற்பட்டது சொற்பகாயம் என்று காயச்சான்றிதழ் வழங்கியுள்ளார். பின்னர் இறுதிகட்ட புலன் விசாரணை செய்வதற்காக வழக்குக் கோப்பை பெற்றுக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பாரதி, 21.11.2016 அன்று இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2)-ன் கீழ் இறுதியறிக்கையை பதிவு செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

சத்தியமூர்த்தி மற்றும் விஸ்வநாதன் ஆகியோர் எழுத்து மூலமாக குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து அளித்த புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டேனா என்றால் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சென்று விசாரணை மேற்கொண்டேன்.

குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் 02.10.2016 அன்று சத்தியமூர்த்தி மற்றும் விஸ்வநாதன் நேரில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்றால் அவர்கள் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. ஆனால் அவர்கள் புகார் அளித்தும் அது வழக்கிற்கு ஏற்றவாறு இல்லாத காரணத்தினால் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 01.10.2016 அன்று 19.00 மணியளவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. Column எண் 12-ல் தகவல் கிடைத்த நேரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்த வாதியை யார் எனக்கு அடையாளம் காட்டியது என்றால் 02.10.2016 அன்று காலை 10.00 மணியளவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன். நோயாளிகள் உள்ள பகுதிக்கு யாருடைய அனுமதியின் பேரில் சென்றேன் என்றால் தகவலின் அடிப்படையில் சென்றேன். Column எண் 12-ல் எத்தனை மணி அளவில் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு முடிக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் பேசக்கூடிய நிலையில் உள்ளாரா என்பதை மருத்துவரிடம் அனுமதி பெற்ற பின்பு தான் புகார் வாக்குமூலம் பதிவு செய்ய இயலும் என்றால் சரியல்ல. மருத்துவர் சிகிச்சையில் உள்ள காயமுற்ற நபர் பேசக்கூடிய மனநிலையில் உள்ளதை உறுதி செய்த பின்னர் தான் புகார் வாக்குமூலம் பதிவு செய்ய இயலும் என்றால் சரியல்ல. வாக்குமூலம் 09.00 மணியிலிருந்து 09.30 மணி வரை பதிவு செய்யப்பட்டது. இந்த விவரத்தையும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். Column எண் 3-ல் பொதுநாட்குறிப்பிலும் தகவல் குறிக்கப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கு கையொப்பம் செய்ய தெரியாது என்பதால் புகார் வாக்குமூலத்தில் அவர் கையொப்பம் செய்ய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தை முழுமையாக குறிப்பிடாமல் சம்பவ இடத்திற்கு முற்றிலும் மாறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இட சாட்சிகளை இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சான்று பொருளை சம்பவ இடத்திலிருந்து சாட்சிகள் முன்னிலையில்

கைப்பற்றாமல் நானே தயார் செய்தேன் என்றால் சரியல்ல. ஜெயந்தி மற்றும் சத்தியமூர்த்தி வழக்கின் சான்று பொருளை கைப்பற்றிய போது ஊரில் இல்லை என்றால் சரியல்ல. எதிரியை விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றால் சரியல்ல. மருத்துவரை நான் விசாரித்தேனா என்றால் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பாரதி தான் விசாரித்தார். மருத்துவர் காயமுற்றவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று காயச் சான்று வழங்கியுள்ளார். உதவி ஆய்வாளர் எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) கீழ் இறுதி அறிக்கை பதிவு செய்துள்ளார். மருத்துவரிடம் பரிந்துரைக்காமல் உதவி ஆய்வாளர் இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1–ன் ஊரில் உள்ள தனி நபர்களை வழக்கின் சாட்சிகளாக விசாரித்து இருந்தால் வழக்கின் உண்மை தெரியவரும் என்பதால் விசாரிக்காமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி மற்றும் அவரின் தந்தையிடம் இருந்து எழுத்து மூலமாக பெற்ற புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யாமல் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிந்ததாக சொல்வது முற்றிலும் தவறு என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் அ.சா.1–னிடம் மருத்துவமனையில் இருந்து நான் புகார் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் எதிரிக்கு எதிராக தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.11.19 18:07:36 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.